**சகல மதிப்பீட்டுப் பரீட்சகர்களுக்குமான விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

மிக முக்கியம் :-

- ❖ **கேட்கப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியாகப் பூரணப்படுத்தப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத, தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உண்மைக்கு புறம்பான தகவல்கள் வழங்குதல் நீண்டகாலப் பரீட்சைத் தடை விதிக்கப்படுவதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் காரணமாகலாம்.**
- ❖ விண்ணப்பப்படிவத்தில் நட்சத்திர (*) குறியீட்டினால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் கண்டிப்பாக நிரப்பப்பட வேண்டியதுடன், ஏனைய பகுதிகளில் தமக்கு உரியவற்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**01. இது தொடர்பில் 2011.03.01 ஆம் திகதியும் 03(01) 2009ஆம் இலக்கமும் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.**

1.1 பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தற்போது கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட அனுபவம் மிக்க ஆசிரிய ஆலோசகர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

1. தகவல் தொழில்நுட்பப் பாடத்துடனான பொதுப் பயிற்சி / விசேட ஆசிரியர் பயிற்சி / தேசிய கல்வியியற் கல்லூரிப் பயிற்சி அல்லது பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் குறித்த பாடத்திற்கான முறையான மற்றும் நிரந்தர நியமனத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

2. பாடசாலையில் சேவையாற்றுபவராயின் க.பொ.த. (உ.தரம்) வகுப்புகளில் தற்போது பொதுத் தகவல் தொழில்நுட்ப (GIT) பாடத்தைக் கற்பித்தலில் ஈடுபடல் அல்லது க.பொ.த. (உ.தரம்) / க.பொ.த. (சா.தரம்) தரங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) பாடக் கற்பித்தலில் ஈடுபடல்

அல்லது

க.பொ.த (உ.தரம்) / க.பொ.த (சா.தரம்) மேற்படி பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகராக (ISA) கடமையாற்றுதல்

அல்லது

கணினி வள நிலையங்களில் குறித்த பாடத்தினைக் கற்பிக்கும் கடமைகளில் ஈடுபடும் ஆசிரிய ஆலோசகராக இருத்தல்

1.2 இலக்கம் 10 ஐப் பூரணப்படுத்தும் போது விண்ணப்பிக்கும் பாடத்திற்குரிய தகுதிகளைக் குறிப்பிடுதல் அவசியமாகும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

1.3 விண்ணப்பப்படிவத்தின் 13 ஆம் 14ஆம் விடயங்களைப் பூரணப்படுத்தும்போது “ஆம்” (Yes) அல்லது “இல்லை” (No) என்பதனை உரிய கூட்டில் தெளிவாகக் குறிப்பிடுக. அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

* **தற்போது உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் நடைபெறுமாயின் அல்லது நீங்கள் பரீட்சைக் கடமைகளில் இருந்து தடைசெய்யப்பட்டிருப்பின் இப்பதவிக்கான விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்க முடியாது.**

* (குடும்ப உறுப்பினர் எனப்படுவோர் - உங்களின் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் உங்களதும் உங்கள் வாழ்க்கைத்துணையினதும் சகோதர சகோதரிகளும் அவர்களது பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் ஆவர்.)

1.4 மேற்படி பரீட்சையின் மதிப்பீட்டு நிலையங்கள் பின்வரும் நகரங்களில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவ எதிர்பார்க்கும் நகரங்களும் நகர எண்ணும்**

| | | | |
|---|---|---|---|
| 01. கொழும்பு | 17. எம்பிலிப்பிட்டிய | 32. குளியாபிட்டி | 48. கல்முனை |
| 03. ஹோமாகம | 19. பண்டாரவளை | 33. சிலாபம் | 49. அக்கரைப்பற்று |
| 08. ஹொரன | 20. பதுளை | 35. அனுராதபுரம் | 50. மட்டக்களப்பு |
| 10. களுத்துறை | 23. அம்பலாங்கொட | 37. திருகோணமலை | 51. வவுனியா |
| 12. நீர்கொழும்பு | 25. காலி | 38. கேகாலை | 52. யாழ்ப்பாணம் |
| 13. கம்பஹா | 27. மாத்தறை | 41. கண்டி | 57. தம்புள்ளை |
| 14. நிட்டம்புவ | 28. தங்கல்லை | 45. ஹற்றன் | |
| 15. இரத்தினபுரி | 30. குருநாகல் | 46. மொனராகலை | |

குறிப்பு: நீங்கள் பணியாற்றும் இடத்திற்கு அருகில் உள்ள மதிப்பீட்டு நிலையத்திற்கே விண்ணபிக்க வேண்டும். போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்படமாட்டாது. எனவே இரண்டாவது தெரிவையும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

1.5 விண்ணப்பப்படிவத்தின் சகல பகுதிகளையும் பூரணப்படுத்தி Submit Button இனைச் சொடுக்கி (Click) உங்கள் விண்ணப்பப்படிவத்தினைத் தரவேற்றம் செய்த பின்னர் அதனை PDF வடிவில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும். குறித்த விண்ணப்பத்தின் வன்பிரதியை (Hard Copy) பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

1.6 குறித்த வன்பிரதியின் 11 (a) பகுதி (நேர அட்டவணை) கையெழுத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு அதிபர்/ பிரதி அதிபர்/ உதவி அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1.7 விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலையில் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். அரச பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலையில் **அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு நிகழ்நிலையில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.**

1.8 கடந்தவருட GIT பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட பரீட்சகர்கள் தவிர ஏனைய சகல விண்ணப்பதாரிகளும் தமது தகைமையை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதுடன் உரிய கல்விச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்திய பிரதிகளை (பாடத்துடன்) இணைத்து அனுப்ப வேண்டும்.

02. விண்ணப்பப்படிவத்தினை உறுதிப்படுத்தல்

ஆசிரியர்களின் விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அதிபராலும், ஆசிரிய ஆலோசகர்களின் விண்ணப்பப்படிவங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர் / கோட்டக் கல்விப் பணிப்பாளராலும் வேறு ஏதேனும் நிறுவனத்தில் பணியாற்றுபவராயின் அந்நிறுவனத்தின் தலைவராலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**03. விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் (அதிபர் / நிறுவனத் தலைவர்)**

3.1 விண்ணப்பதாரி இப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையா என்பதைப் பரிசீலிக்கவும்.

3.2 விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியென 3 ஆம் பக்கத்திலுள்ள உரிய இடத்தில் கட்டாயமாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

3.3 விண்ணப்பப்படிவத்தில் இலக்கம். 16 (a) இல் (i) தொடக்கம் (iv) வரையான விடயங்களின் கீழ் விண்ணப்பதாரி பற்றிய உங்கள் கணிப்பை உரிய கூடுகளில், பின்வருவனவற்றுள் தகுந்த குறியீட்டால் அடையாளப்படுத்தவும்.

**A -** சிறப்பானது **B -** நன்று **C -** சாதாரணம் **W –** பலவீனம்

3.4 இது அந்தரங்க அறிக்கையாகும். சகல விண்ணப்பப்படிவங்களும் உங்களால் நிகழ்நிலையில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

1. அவ்வாறே பதிவிறக்கம் செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட சகல விண்ணப்பப்படிவங்களையும் உறுதிப்படுத்திய பின்னர் கோவைப்படுத்தி (புதிய விண்ணப்பதாரிகளின் பெயர்கள் உரிய இணைப்புகளுடன்) உங்கள் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.
2. சாராம்ச அறிக்கையின் மூலப்பிரதி, சகல விண்ணப்பதாரிகளினதும் விண்ணப்பப்படிவங்களின் மூல வன்பிரதிகள், உறுதிப்படுத்தப்பட்ட ஏனைய சகல இணைப்புக்கள் ஆகியவற்றை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"GIT - 2025 விடைத்தாள் பரீட்சகர் விண்ணப்பப்படிவம்"** எனக் குறிப்பிட வேண்டும்.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**த.பெ.இல. - 1503,**
**கொழும்பு.**

சகல விண்ணப்பப்படிவங்களையும் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி **2025.10.31** என்பதைக் கவனத்திற் கொள்க.